**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.176/2025
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : கணேசபாண்டியன் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : போஸ் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.02.2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் தற்போது முதுகுளத்தூர் காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.04.2025ம் தேதி காலை 10.30 மணிக்கு முதுகுளத்தூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளர் திரு.சுரேஷ்குமார் தலைமையில் நானும், முதல்நிலைக்காவலர் திரு.சந்திரசேகர் ஆகியோர் மதுவிலக்கு சம்மந்தமாக முதுகுளத்தூர் சரவணபொய்கை ஊரணி அருகே சந்தேகப்படும்படி ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவரை பிடித்து விசாரித்தபோது அவர் தனது பெயர் வெங்கடேஷ் கண்ணப்பன் என்று கூறி அவரது முகவரியை தெரிவித்தார். அவர் தனது கையில் ஒரு வெள்ளைப்பை வைத்திருந்தார். அந்த பையை சார்பு ஆய்வாளர் பரிசோதித்தபோது அதில் தலா 180ML அளவுள்ள Mclane Brandy 10 பாட்டில்கள் இருந்தன. அவரது கையில் ரூ.200 பணம் வைத்திருந்தார். அவரை விசாரித்தபோது எந்த அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் மதுபானக்கடையில் வாங்கி சுயலாபம் கருதி விற்பனைக்காக வைத்திருந்ததாக கூறினார். அவர் மதுமானங்களை சட்ட விரோதமாக விற்று ரூ.200 பணத்தை வைத்திருப்பதாக தெரிவித்தார். எனவே அவரை காலை 10.30 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி சார்பு ஆய்வாளர் அவர்கள் கைது செய்தார். அவர் வைத்திருந்த மதுபாட்டில்கள் மற்றும் பணம் ரூ.200யை தனி நபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் என் முன்னிலையிலும் முதல்நிலைக்காவலர்

திரு.சந்திரசேகர் முன்னிலையிலும் சார்பு ஆய்வாளர் கைப்பற்றி தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் நானும், சந்திரசேகர் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் எதிரியை 11.10 மணிக்கு நிலையம் அழைத்து வந்து சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது குற்ற எண்.91/2025 சட்டப்பிரிவு 4(1)(A), 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மதுபாட்டில்களை தான் எதிரியிடமிருந்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். **அந்த புகைப்படம் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் தகவல் தெரிந்து முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்தது அனைத்தும் சார்பு ஆய்வாளர் என்றால் சரிதான். சாட்சிப்பட்டியலில் உள்ள அனைவரும் காவல்துறையை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். முதல்தகவல் அறிக்கையில் எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படுகிற பையின் நிறம் குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த பையை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நாங்கள் அன்றைய தினம் ரோந்து சென்றது குறித்து பொதுநாட்குறிப்பேட்டில் குறிப்புகள் உள்ளனவா என்றால் உள்ளது. அதை சார்பு ஆய்வாளர் விசாரித்தபோது காண்பித்தேனா என்றால் அவர் கேட்கவில்லை அதனால் காண்பிக்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற தேதியில் அரசு மதுபானக்கடை விடுமுறை அல்ல என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற இடமானது பொதுமக்கள் நடமாட்டம்உள்ள பகுதி என்றால் சரியல்ல. நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும், அங்கு ஆள்நடமாட்டம் இருக்கும் என்றால் சரியல்ல. தனிநபர் சாட்சிகளை வைத்து மேற்படி பாட்டில்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான்.

எதிரியானவர் மதுபானங்கள் எதையும் வைத்திருக்கவில்லை என்றாலும், நான் கூறியபடி மதுபாட்டில்கள் இருந்திருந்தால் அவைகளை கைப்பற்றும்போது குறைந்தபட்சம் செல்போனிலாவது நாங்கள் வீடியோ பதிவு செய்திருக்க வேண்டும் என்றாலும், இவ்வழக்கை பொறுத்த வரை வீடியோ பதிவு எதுவும் இல்லாத நிலையில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வது நம்பும்படியாக இல்லை என்றாலும் சரியல்ல. சார்பு ஆய்வாளரால் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படுவதை வீடியோ பதிவு செய்யாதது அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு உட்படுத்துகிறது என்றால் சரியல்ல. நான் கூறிய படி எதிரி மதுபானங்களை வைத்திருக்கவில்லை என்றாலும் அவரிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வதும் பொய் என்றாலும், எனது உயர்அதிகாரி கேட்டுக்கொண்டதால் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் கையொப்பம் செய்துகொடுத்து தற்போது அரசு தரப்பு வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், புள்ளிவிபர கணக்கிற்காக எதிரி மீது வழக்கிடப்பட்டு உயர்அதிகாரிகள் கேட்டுக்கொண்டதால் அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.176/2025
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : சந்திரசேகர் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : காந்தி | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.02.2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் தற்போது முதுகுளத்தூர் காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.04.2025ம் தேதி காலை 10.30 மணிக்கு முதுகுளத்தூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளர் திரு.சுரேஷ்குமார் தலைமையில் நானும், முதல்நிலைக்காவலர் திரு.கணேசபாண்டி (அசா.1) ஆகியோர் மதுவிலக்கு சம்மந்தமாக முதுகுளத்தூர் சரவணபொய்கை ஊரணி அருகே சந்தேகப்படும்படி ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவரை பிடித்து விசாரித்தபோது அவர் தனது பெயர் வெங்கடேஷ் கண்ணப்பன் என்று கூறி அவரது முகவரியை தெரிவித்தார். அவர் தனது கையில் ஒரு வெள்ளைப்பை வைத்திருந்தார். அந்த பையை சார்பு ஆய்வாளர் பரிசோதித்தபோது அதில் தலா 180ML அளவுள்ள Mclane Brandy 10 பாட்டில்கள் இருந்தன. அவரது கையில் ரூ.200 பணம் வைத்திருந்தார். அவரை விசாரித்தபோது எந்த அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் மதுபானக்கடையில் வாங்கி சுயலாபம் கருதி விற்பனைக்காக வைத்திருந்ததாக கூறினார். அவர் மதுமானங்களை சட்ட விரோதமாக விற்று ரூ.200 பணத்தை வைத்திருப்பதாக தெரிவித்தார். எனவே அவரை காலை 10.30 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி சார்பு ஆய்வாளர் அவர்கள் கைது செய்தார். அவர் வைத்திருந்த மதுபாட்டில்கள் மற்றும் பணம் ரூ.200யை தனி நபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் என் முன்னிலையிலும் அசா.1ன்

முன்னிலையிலும் சார்பு ஆய்வாளர் கைப்பற்றி தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் நானும், அசா.1ம் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் எதிரியை 11.10 மணிக்கு நிலையம் அழைத்து வந்து சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது குற்ற எண்.91/2025 சட்டப்பிரிவு 4(1)(A), 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். என்னிடம் காட்டப்படும் அசா.ஆ.2 ஆவணத்தில் உள்ள மதுபாட்டில்களை தான் எதிரியிடமிருந்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் தகவல் தெரிந்து முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்தது அனைத்தும் சார்பு ஆய்வாளர் என்றால் சரிதான். சாட்சிப்பட்டியலில் உள்ள அனைவரும் காவல்துறையை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். முதல்தகவல் அறிக்கையில் எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படுகிற பையின் நிறம் குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த பையை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரி ரூ.200 வைத்திருந்ததாகவும், அதை கைப்பற்றியதாகவும் சொல்லப்படுகிற நிலையில் அந்த பணத்தின் எண் என்ன என்பதை மகசரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனவே பணமானது நான் கூறிய விதத்தில் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் அன்றைய தினம் ரோந்து சென்றது குறித்து பொதுநாட்குறிப்பேட்டில் குறிப்புகள் உள்ளனவா என்றால் உள்ளது. அதை சார்பு ஆய்வாளர் விசாரித்தபோது காண்பித்தேனா என்றால் அவர் கேட்கவில்லை அதனால் காண்பிக்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற தேதியில் அரசு மதுபானக்கடை விடுமுறை அல்ல என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற இடமானது பொதுமக்கள் நடமாட்டம்உள்ள பகுதி என்றால் சரியல்ல. நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும், அங்கு ஆள்நடமாட்டம் இருக்கும் என்றால் சரியல்ல. தனிநபர் சாட்சிகளை வைத்து மேற்படி பாட்டில்கள் கைப்பற்றப்படவில்லை

என்றால் சரிதான்.

எதிரியானவர் மதுபானங்கள் எதையும் வைத்திருக்கவில்லை என்றாலும், நான் கூறியபடி மதுபாட்டில்கள் இருந்திருந்தால் அவைகளை கைப்பற்றும்போது குறைந்தபட்சம் செல்போனிலாவது நாங்கள் வீடியோ பதிவு செய்திருக்க வேண்டும் என்றாலும், இவ்வழக்கை பொறுத்த வரை வீடியோ பதிவு எதுவும் இல்லாத நிலையில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வது நம்பும்படியாக இல்லை என்றாலும் சரியல்ல. சார்பு ஆய்வாளரால் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படுவதை வீடியோ பதிவு செய்யாதது அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு உட்படுத்துகிறது என்றால் சரியல்ல. நான் கூறிய படி எதிரி மதுபானங்களை வைத்திருக்கவில்லை என்றாலும் அவரிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வதும் பொய் என்றாலும், எனது உயர்அதிகாரி கேட்டுக்கொண்டதால் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் கையொப்பம் செய்துகொடுத்து தற்போது அரசு தரப்பு வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், புள்ளிவிபர கணக்கிற்காக எதிரி மீது வழக்கிடப்பட்டு உயர்அதிகாரிகள் கேட்டுக்கொண்டதால் அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.